2018 ஜூன் 28]

முற்பகல் 11–55

(ஈ) தமிழகக் காவல் துறை சார்பாக நடைபெறவுள்ள இரத்த தான முகாம் மற்றும் இரத்தத்தைப் பாதுகாத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்துவிட்டு, உட்காருங்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற 29 ஆம் தேதி, தமிழகக் காவல் துறையின் சார்பாக ஒரு மாபெரும் இரத்த தான முகாம் நடைபெறும் என்றும், அந்த முகாமினை சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து, அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். ஏறத்தாழ 1,20,000 காவலர்கள் பல்வேறு நிலைகளில் பணியாற்றினாலும், அவர்களில் குறைந்தபட்சம் சுமார் 50 சதவிகிதத்தினராவது இரத்த தானம் கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்கிற அடிப்படையில், குறைந்தது 60,000 யூனிட்டுகள் இரத்தம் பெறப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 60,000 யூனிட் இரத்தத்தைச் சேமித்து வைப்பதற்கும், அதனை உடனடியாகப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பில்லை என்று செய்திகள் வந்திருக்கின்றன.*

குறிப்பாக, அரசு மருத்துவக் கல்லூரிகளில் 88 இரத்த வங்கிகள்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 88 அரசு இரத்த வங்கிகளிலேயும் இந்த 60,000 யூனிட் இரத்தத்தைச் சேமித்து வைத்து, உடனடியாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. இரத்தத்தின் உபபொருளாக இருக்கின்ற சிவப்பு அணுக்கள், தட்டை அணுக்கள், plasma *ஆகியவற்றைப் பிரித்தாலும்கூட, சிவப்பு அணுக்களை 42 நாட்களில் பயன்படுத்த வேண்டும்; தட்டை அணுக்களை 5 நாட்களில் பயன்படுத்த வேண்டும்;* Plasma*–வை ஓராண்டு வரை பயன்படுத்தலாம். அந்த வகையில் 60,000 யூனிட்டுகளையும் ஒரே நாளில் எடுத்துப் பயன்படுத்துவது என்பது முடியாத காரியம் என்று செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட நிலையில் இந்த இரத்த தான முகாமை நடத்துவது அவசியம்தானா? ஒருவேளை இப்படிப்பட்ட நிகழ்வுகளை நடத்துவதைவிட, அந்தக் காவலர்களுடைய*

இரத்த வகைகளைக் கண்டுபிடித்து, அவர்களுடைய இரத்தம் எந்த வகையைச் சேர்ந்தது என்பதையும், அவர்கள் எங்கெங்கே பணிபுரிகிறார்கள் என்பதையும், அவர்களுடைய முகவரி, அவர்களுடைய தொலைத் தொடர்பு விவரங்களை மாவட்டவாரியாகப் பெற்று ஒரு கண்காணிப்பாளரை நியமித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அவற்றையெல்லாம் குறித்து நீங்கள் விளக்கமாகப் பேசாதீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை மட்டும் ஈர்த்துவிட்டு உட்காருங்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *இரத்தம் வீணாவதைத் தடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார். நேற்றைக்கே, காலையில் முன்னணி நாளிதழிலும் இந்தச் செய்தியைப் பார்த்தோம். அந்தச் செய்தியில் ஒரு துளியளவுகூட உண்மையில்லை. நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும், 88 அரசு இரத்த வங்கிகள் என்று சொன்னார். 89* blood banks *இருக்கின்றன.* Storage units*–ஐப் பொறுத்தவரையில், 393* storage units *அரசு சார்பில் இருக்கின்றன. இதில் இரண்டே விஷயங்கள்தான் இருக்கின்றன. நாளைக்குக் காவல் துறையினர் தாமாகவே முன்வந்து ஒரு நல்ல நிகழ்வாக இதைச் செய்யவிருக்கிறார்கள். ஏனென்றால், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இரத்த தானத்தில் ஒரு முன்னோடி மாநிலமாக இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலங்களில், பொதுவாக, அரசு மருத்துவமனையிலும், தனியார் மருத்துவமனையிலும், திடீரென்று* blood *இல்லை என்கிற ஒரு நிலையினால் பரிதவித்துக் கொண்டிருப்பார்கள். அறுவை சிகிச்சை தடைபடும். அதனால், அவர்கள் எங்கெல்லாமோ இரத்தம் தேடி அலையக்கூடிய நிலையிருந்தது. ஆனால், இன்றைக்கு அரசு மருத்துவமனையாக இருந்தாலும், தனியார் மருத்துவமனையாக இருந்தாலும், அரசு மருத்துவமனையிலிருந்து, தனியார்*

2018 ஜூன் 28] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மருத்துவமனைக்கு 100 சதவிகிதம் இரத்தம், platelets, packed cell, plasma ஆகிய எல்லாமே எந்தவிதக் கட்டணமும் இல்லாமல் தானமாகக் கொடுக்கக்கூடிய அளவிற்குத் தன்னிறைவு பெற்ற நிலையிலே நம்முடைய இரத்த தான முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இரண்டே செய்திகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். நாளைக்கு நடக்கவிருக்கும் இந்த இரத்த தான முகாமில் 1 இலட்சத்திற்கும்மேல் காவல் துறை பணியாளர்கள் இருந்தாலும், அவர்களாகவே மனமுவந்து 20,000 யூனிட்டுகள்தான் donate செய்கிறார்கள். மாதத்திற்கு 33,000–லிருந்து 35,000 யூனிட்டுகள் நமக்குத் தேவையிருக்கிறது. அவர்கள் 20,000 யூனிட்டுகள் இரத்தம்தான் donate செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரே, ஒரு மருத்துவர். அதனால் அவரே அழகாகச் சொல்லிவிட்டார். ஆகவே plasma–வை நாம் one year வரை வைத்திருக்கலாம். Fresh blood–ஐ நாம் 35 நாட்கள் வைத்திருக்கலாம். Packed cell–ஐ 47 நாட்கள் வைத்திருக்கலாம். One year வரைக்கும் plasma–வை வைத்திருக்கலாம். நம்முடைய தேவைக்காகத்தான் இந்த நிகழ்வு நடைபெறுகிறது. பொதுவாகப் பார்த்தோமென்றால், blood donation camp மூலமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரி மாணவர்கள் இரத்தம் வழங்குவார்கள். அவர்களுக்கு மே மாதத்தில் holiday. எனவே, அவர்களுக்கு மே மாதத்தில் holiday ஆக இருப்பதால், இந்த மாதம் ஒரு தேவை நிலையிருக்கிறது. ஆக, நாளை காவல் துறை பணியாளர்கள் மனமுவந்து அளிக்கக்கூடிய இந்த இரத்த தானத்தில், ஒரு சொட்டு இரத்தம்கூட வீணாவதற்கு எந்தவிதமான வாய்ப்பும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு மகத்தான சேவை. இது ஒரு நல்ல சேவை. இந்த நல்ல சேவைக்காக காவல் துறைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்றிருக்கக்கூடிய காவல் துறைக்கு இந்த சந்தர்ப்பத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று மற்ற துறைகளும் முன்வருகின்றபோது, நிச்சயமாக பல்வேறு உயிர்களைக் காப்பதற்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமையும். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்த இரத்த தான முகாம்கள் மூலமாக, நாங்கள் அவர்களைப் பதிவு செய்துகொள்கிறோம். Rare blood group என்ற வகையில், இரத்தக் கொடையாளர்களாக, இந்த 20,000 பேர் மாறிவிடுகிறார்கள்.

இரத்தம் எப்பொழுது தேவையோ, மீண்டும் அவர்கள் இரத்தம் வழங்குவதற்குரிய வாய்ப்பையும் தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது முதன்முறையாக நடக்கக்கூடிய நிகழ்வாகும். 60,000 யூனிட்டுகளை வைத்துப் பாதுகாக்கும் அளவிற்கு நமக்கு capacity இருக்கிறது. 20,000 பேர்தான் இரத்த தானம் கொடுக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு 33,000 யூனிட்டுகள் தேவையிருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய பிறந்தநாளையொட்டி, நம்முடைய போக்குவரத்துத் தொழிலாளர்கள் தமிழக அரசின் சார்பாக மிகப் பெரிய அளவில் இரத்த தான முகாம் நடத்தி, ஒரு கின்னஸ் சாதனையைப் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தானத்திலே சிறந்தது, இரத்த தானம். அந்த நிகழ்வு குறித்து நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மிக அழகாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'சுவையான முறுக்கு என்று நீங்கள் கொசுவர்த்தியைக் கடிக்கிறீர்கள்' என்று நேற்றைக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுபோன்ற செய்திதான் என்னுடைய நினைவிற்கு வருகிறது என்று சொல்லி, இது நல்ல நிகழ்வு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12—00

5. கவன ஈர்ப்பு

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மூட இருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அர. சக்கரபாணி, முனைவர் க. பொன்முடி, திரு. தங்கம் தென்னரசு, முனைவர் கோவி. செழியன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.